விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 26
ஒலி 027 வள்ளுவர் ஆண்டு 2056 தை 02 புதன்கிழமை (15.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# சீன ஜனாதிபதியுடன் அநுர இன்று சந்திப்பு

- பேச்சுவார்த்தைகளின் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து
- உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா



(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பின் பின் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் மழை தொடரும் என யாழ். பல்கலைக்கழக 15

## கிளிநொச்சியில் காயமடைந்த யானை உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கரைப்பகுதியில் 15 நாட்களாக காயத்துடன் காணப்பட்ட யானை உயிரிழந்துள்ளது. 15

## 13ஆவது திருத்தச் சட்டத்தில் கைவைப்பதற்கு முனையவில்லை

### தமிழகத்தில் அமைச்சர் சந்திரசேகர்

(சென்னை)

13ஆவது திருத்தச்சட்டத்தினை தமிழ் மக்கள் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்ற நிலையில் அதில் கைவைப்பதற்கு நாங்கள் முனையவில்லை என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அயலகத்தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் 15

## வல்வை பட்டத் திருவிழா

### உயிர்த்தெழும் ட்ராகன் முதலிடம்



02

## கலாநிதிப் பட்ட விவகாரம்

### பாராளுமன்ற ஊழியர்களிடம் இன்று விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம்குறிப்பிடப்பட்டமை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக, பாராளுமன்ற ஊழியர்கள் பலர் இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பாராளுமன்ற பதிவு அலு 15

## கடற்றொழிலாளர் பிரச்சினை ஸ்டாலினுடன் பேச்சுவார்த்தை

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இந்தியக் கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கேட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வு 15

### எதிர்வரும் 18ஆம் திகதி

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையில்உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர்கூடத்தில் குறித்த தினமன்று காலை பத்து மணிக்கு 15

## கப்பம் பெற்ற நான்கு பொலிஸார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சட்டபூர்வ ஆவணங்களின் அடிப்படையில் மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றில் கப்பம் 02

### இந்த மாத இறுதியில்

## வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு

(கொழும்பு)

கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு இந்த மாத இறுதியில் வழங்கப்படும் என்று கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பயிர் சேத மதிப்பீடுகளில் சுமார் 95 சதவீதம் தற்போது நிறைவடைந்துள்ளதாக அதன் தலைவர் பேமசிறி ஜாசிங்கராச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய சம்பவங்களைக் கொண்டு எமது ஆட்சியை மதிப்பிடக்கூடாது

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

*(கொழும்பு)*

இடம்பெறும் சிறிய சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை யாரும் மதிப்பிடக் கூடாது. இந்த ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் மீளத் திருப்புவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். அத்துடன் கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டம் பெப்ரவரியிலே ஆரம்பிக்கும் என தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒருசில ஊடகங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்த நல்ல விடயத்தையும் பிரசுரிப்பதில்லை. எமது குறைபாடுகளை மாத்திரமே ஒளிபரப்பி வருகின்றன. அரசாங்கம் ஊடகங்க்ளை அடக்குவதாக தெரிவிக்கின்றனர். நாங்கள் ஒருபோதும் ஊடகங்களை அடக்குவதற்கு முற்படப் போவதில்லை. நாங்கள் எப்போதும் ஊடகங்களுடன் சிநேகபூர்வமாகச் செயற்பட்டவர்கள், செயற்படுபவர்கள். இந்த ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் மீளத் திருப்புவதற்கு இடமளிக்கக் கூடாது. இடமளிக்கவும் மாட்டோம்.

அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், சிறிய சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை மதிப்பிடக் கூடாது. முச்சக்கரவண்டி, பஸ் வண்டிகளில் மேலதிக உதிரிப் பாகங்களை அகற்றுதல் அல்லது அரிசிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு எமது ஆட்சியை மதிப்பிட வேண்டாம்.

மேலும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி தலைமையில் நாங்கள் கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். இந்த மாதம் முழுவதும் இந்த வேலைத்திட்டத்தை அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம் பெறுகிறது. ஆனால் இலங்கைப் பொலிஸ், கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பித்துள்ளதாக சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனால் நாங்கள் இதனை பெப்ரவரியிலேயே ஆரம்பிக்கிறோம். தற்போது அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம்பெறுகிறது.

ஆனால், பொலிஸார் சுற்று நிருபம் வெளியிட்டு முச்சக்கரவண்டி, பஸ்வண்டிகளின் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றும்போது, கிளீன் ஶ்ரீலங்கா என்பது இதுதானா என மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளனர். எனவே கிளீன் ஶ்ரீலங்கா என்பது இதுவல்ல. அது பாரிய வேலைத்திட்டம். அது படிப்படியாக முன்னெடுக்கப்படும்போது மக்கள் எங்களை விளங்கிக்கொள்வார்கள் என்றார். (ம-7)

## நான்கு...

பெற்ற நான்கு பொலிஸார் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை அருகே வீரவில பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பொலிஸ் சார்ஜண்ட், இரண்டு கான்ஸ்டபிள்கள் ஆகியோரே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாடுகளை ஏற்றிச் செல்வதற்கான சட்டபூர்வ ஆவணங்கள் இருந்த நிலையில், மிருகவதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவதாக அச்சுறுத்தி லொறி சாரதியிடம் இருந்து குறித்த நால்வரும் 11,000 ரூபாவை கப்பமாகப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து லொறிச் சாரதி மேற்கொண்ட முறைப்பாட்டின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நான்கு பொலிஸாரும் கப்பம் பெற்றுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அம்பாந்தோட்டை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் குறித்த நான்கு பொலிஸாரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## உயிர்த்...

வல்வை பட்டத் திருவிழாவில் உயிர்த்தெழும் ட்ராகன் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.


யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் ராட்சத பட்டத்திருவிழாவானது நேற்று கொட்டு மழைக்கு மத்தியிலும் சிறப்புற இடம்பெற்றுள்ளது.

வல்லை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும், வல்லை உதயசூரியன் கழகமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பல வகையான பட்டங்கள் மழைக்கு மத்தியிலும் போட்டியில் பங்கேற்றன.இதில் முதல் 30 இடங்களைப் பிடித்த பட்டங்களுக்குப் பரிசில்களும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குத் தங்கநாணயமும் வழங்கப்பட்டது. அந்த வகையில் முதலாம் இடத்தினை உயிர்த்தெழும் ட்ராகன் பட்டமும் இரண்டாம் இடத்தினை மின்பிறப்பாக்கியும் மூன்றாம் இடத்தினை ஹெலிகொப்டர் மூலம் தூக்கிச் செல்லும் திரையரங்கு ஆகிய பட்டங்களும் பெற்றன.

வெற்றியீட்டிய பட்டங்களின் உரிமையாளர்களுக்கு வடமாகாண ஆளுநர் வேதநாயகன் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (ம-7)

## மரண அறிவித்தல்

பிறப்பு
15 - 08 - 1937



இறப்பு
12 - 01 - 2025

### கோபாலகிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரி

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலகிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரி அவர்கள் கடந்த (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-பசுபதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சி.கோபாலகிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், இந்திராணி ஆகியோரின் சகோதரியும் மற்றும் உதயமலர், கோடீஸ்வரன் (டென் மார்க்), பாமலர், மகேஸ்வரன் (டென்மார்க்), யோகேஸ்வரன் (சுவிஸ்), பரமேஸ்வரன் (கனடா), தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வநாதன் (செல்லையா ஸ்ரோர் கண்டி), நிரஞ்சனா (டென்மார்க்), காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, மற்றும் சாந்தகுமாரி(டென்மார்க்), தர்ம புஷ்பா (சுவிஸ்), நிர்மலா(கனடா), உதயகுமார் (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுலா-மதிகரன், கிஷாந்தன், சயந்தா-சஜித்சரவணா, கிரிஜன்-லீசா, கீர்த்தனா, சோபிதா-சதீஸ்வரன், ஆர்த்தியா-ஜெய்கணேஷ், சயந்தன்-லினோஜா, அபிலாஷா-பேபிஷாந், கிஷோக், மதுஜன், மயூனா, அபிராஜ், ஆகாஷ், அஜய், பபிஷா, கம்ஷன், விஷால், ஹம்ஷா, ஹாவ்யா, ஹனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மெல்லினா, ஆருத்தன், சாஷ்னி, ஷாத்விக், ஜெய்வந், அஹானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் பூவரசந்திட்டி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 766 3115, 077 610 7964

(C-2042)

[illegible]

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.12.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் இராசரத்தினம் சிவபாக்கியம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 16.01.2025 வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.01.2025 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-2041)

எமது அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மாகியப்பிட்டிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா சென்ற அநுரவுக்கு

## இராணுவ மரியாதையுடன் வரவேற்பு

(பீஜிங்)

**சீனா சென்றடைந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சீன பிரதி வெளியுறவு அமைச்சர் சென் சியாடொன் வரவேற்றதோடு, சீன இராணுவத்தின் முழு இராணுவ மரியாதையுடன் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.**





ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயணித்த பாதையின் இருமருங்கும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும், பல உயர் மட்ட வணிகக் கூட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளன.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீன தூதுவர் சீ ஜென் ஹொன்ங், சீனாவுக்கான இலங்கை தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர். (நி)

## திடீர் தீர்மானங்களால் மாற்றம் ஏற்படாது

### தயாசிறி அறிவுரை

(கொழும்பு)

அரசாங்கத்தின் திடீர் தீர்மானங்களால் எந்தவொரு சாதகமான மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் சிறந்ததாகும். ஆனால் பேருந்து மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு சிறிது கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். குறிப்பிட்டவொரு கால அவகாசத்தை அவர்களுக்கு வழங்கி இந்த காலப்பகுதிக்குள் அவர்கள் எவ்வாறானவற்றை செய்ய வேண்டும், எவற்றை தவிர்க்க வேண்டும் என்பது தொடர்பில் தெளிவூட்ட வேண்டும். இது வரை காலமும் அவர்கள் போக்குவரத்து அதிகார சபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கமையவே செயற்பட்டு வந்தனர். தற்போது திடீரென அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் போது அவர்களுக்கு அது அசௌகரியத்தை ஏற்படுத்தக் கூடும். பழைய அதிகாரிகளை பழிவாங்கும் செயற்பாடுகளை மாத்திரம் முன்னெடுத்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை என அவர் தெரிவித்தார். (நி)

# இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ள டிஜிற்றல் அடையாள அட்டைகள்

(கொழும்பு)

இந்த மாதம் முதல் டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், புதிதாக வழங்கப்படும் அனைத்து அடையாள அட்டைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன் அடையாள அட்டைகளைப் பெறுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டுள்ளதால், அதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் டிஜிற்றல் அடையாள அட்டை முறையை உருவாக்குவதற்கு சுமார் 20 பில்லியன் ரூபாய் செலவாகும் என்பதால் அதில் பாதியை இந்தியாவின் உதவி மூலம் பெற எதிர்பார்ப்பதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# போலி வைத்தியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

(கொழும்பு)

போலி வைத்தியர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு உட்பட நாட்டின் 9 மாகாணங்களிலும் போலி வைத்தியர்கள் சிலர் கடமையாற்றுகின்றார்கள். அவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மருத்துவத்துறை மகத்தானது. போலி வேடம் தயாரித்து எவரும் மருத்துவத் துறைக்குள் உள்நுழைய முடியாது. மக்களின் உயிருடன் விளையாட எவருக்கும் இடமளிக்க முடியாது." என அவர் தெரிவித்தார். (நி)

# அரசியல் கைதிகளென எவரும் சிறைகளில் தடுத்து வைக்கப்படவில்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைச் சிறைகளில் அரசியல் கைதிகளென யாரும் தடுத்து வைக்கப்படவில்லை என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள எந்தவொரு சிறைகளிலும் அரசியல் கைதிகள் என்றொருவரும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளார்கள். இவர்களில் சிலருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. சிலரது வழக்குகள் நீண்டகாலமாகவும், குறுகிய காலமாகவும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், நாடாளவிய ரீதியில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியலை விரைவாகத் தயாரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளைச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்று முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றோம்.

அரசாங்கத்தினைப் பொறுத்த வரையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நியாயமாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதையே இலக்காகக்கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி)

# மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### அநுர அரசு உறுதி



(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்போம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதியளித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசு போல் இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் ஆதாயம் தேட எமது அரசு முயலாது. இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காண்போம்.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசுடன் ஏற்கனவே பேசிவிட்டோம். தொடர்ந்தும் பேசுவோம். இரு நாட்டு மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வு காண்போம். என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025



**சனியை இராசிநாதனாகக் கொண்ட மகர இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு மனதில் இருந்த குழப்பங்கள் விலகி தெளிவான சிந்தனைகள் குடிகொள்ளும். கடன் பிரச்சினை தீர வழிகளைக் காண்பீர்கள். வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் தீர்ந்து மீண்டும் அவசியம்.

**ஆரோக்கியம்:** சிலருக்கு பல், அடிவயிறு சம்பந்தமான உபாதைகள் தோன்றி மருத்துவச் செலவுகள் உண்டாகும். கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

**பொருளாதாரம்:** பணம் சார்ந்த விடயங்களில் இருந்துவந்த மந்த நிலை மாறும். புதிதாக பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். முதலீடு சம்பந்தமான விடயங்களில் அதிக கவனம் தேவை.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். திட்டமிட்ட வேலைகளை உடனுக்குடன் முடிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் அவர்களைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டாம். வாகனம் வாங்கிடும் யோகபலன்கள் உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள் பொதுச்சேவையில் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். கட்சி மேலிடத்தின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். இதனால் உங்களை புதிய பதவிகள் தேடி வரும். எதிரிகள் உங்களிடம் அடங்கி நடப்பார்கள். மக்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவுக்குக் கிடைத்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினர் சிறப்பான புதிய ஒப்பந்தங்களைப் பெறுவீர்கள். இதனால் உங்கள் பெயரும் புகழும் உயரும். உங்களின் திறமைகள் பளிச்சிடும். சக கலைஞர்களுடன் ஒற்றுமையாகப் பழகுவீர்கள். அவர் களிடமிருந்து நல்லுதவிகளைப் பெறுவீர்கள். புதிய வாகனங்களின் சேர்க்கை உண் இருப்பது நன்மை தரும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். குழந்தைகளின் கல்வி பற்றிய கவலை குறையும். எல்லா துன்பங்களும் நீங்கி வாழ்வில் இன்பம் உண்டாகும்.

மனக் குழப்பங்கள் நீங்கும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் பேச்சின் இனிமையால் எடுத்த காரியம் கைகூடும். சுப பலன்கள் உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனால் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**திருவோணம்:** இந்த ஆண்டு தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கலாம். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள்

## விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள்

வேலைகள் துவங்கும். இல்லத்தில் சுபசெலவுகள் உண்டாகும். வங்கிகளிடமிருந்து எதிர்பார்த்த கடன் கிடைக்கும். ஆனால் விளையாட்டாக பேசும் வார்த்தைகள் வீண் வம்புக்கு வழி வகுக்கும். எனவே கவனமாக இருக்கவும்.

மறதியால் முக்கிய விடயங்களில் தாமதம் ஏற்படலாம். உங்களின் செல்வாக்கு உயரத் தொடங்கும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை முறையாகச் செய்து குடும்ப வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். இடம், பொருள், ஏவல் அறிந்து பேசி மற்றவர்களைக் கவர்வீர்கள். போட்டியாளர்களின் நெருக்கடிகளைத் தாண்டி வேலைகளை சரியாக முடிப்பீர்கள்.

**குடும்பம்:** குடும்பத்தினருடன் இனிமையான பயணங்களைச் செய்வீர்கள். ஆக்கபூர்வமான எண்ணங்களை நடைமுறைப் படுத்தி முன்னேறுவதற்கான வாய்ப்புகளைத் தேடுவீர்கள். வீட்டிற்கு பராமரிப்பு செலவுகளும், வாகனங்களை பழுது பார்க்கும் செலவுகளும் உண்டாகும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களின் விமர்சனங்களை பெரிதுபடுத்தாமல் நடந்துகொள்வீர்கள். கிடப்பில் கிடந்த நல்ல திட்டங்களை மன உளைச்சல் இல்லாமல் செய்யத் தொடங்குவீர்கள்.

குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளுடன் முக்கிய விடயங்களை செயற்படுத்தி குடும்பத்தில் அமைதி கெடாமல் பார்த்துக் கொள்வீர்கள். வீண் வதந்தி, வீண் வம்பு இரண்டும் வளராதவாறு இந்த ஆண்டு பார்த்துக்கொள்வது மேலும் உங்களின் கோரிக்கைகள் சற்று தாமதமாகப் பரிசீலிக்கப்படும். மற்றபடி அலுவலக ரீதியான பயணங்கள் அனுகூலமான பலன் களைக் கொண்டு வந்து சேர்க்கும். புதிய பயிற்சிகளை மேற்கொள் வீர்கள்.

**வியாபாரிகள்:** வியாபாரிகள் இந்த ஆண்டில் எதிர்பார்த்த இலாபத்தைக் காண முடியாது. தீயவர்களை இனம் கண்டு அவர்களிடமிருந்து விலகியிருப்பது நல்லது. போட்டிகள் நியாயமற்ற வையாக இருக்கும் என்பதால் வியா பாரத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. கூட்டாளிகள் உங்கள் முடிவுகளை ஆமோதிப்பதுபோல் தெரிந்தாலும் முதுகுக்குப் பின்னால் தவறாகப் பேசுவார்கள். இதனால் அவர்களிடம் இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மற்றபடி கொடுக்கல், வாங்கலில் நஷ்டங்கள் ஏற்படாது.

**பெண்கள்:** பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை நன்றாக இருக்கும். உறவும், சுற்றமும் அனுகூலமாக இருக்கும். அவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்வீர்கள். விருந்து, கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்ச் சியாகப் பொழுதைக் கழிப்பீர்கள். தாய்வீட்டுச் சீதனம் வந்து சேரும். உங்கள் பெயரில் அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

பணிபுரியும் பெண்கள் தங்கள் கை சேமிப்பை குடும்பச் சுபசெலவுகளுக்காக பயன்படுத்தும் புதிய வாய்ப்புகள் ஏற்படும். தெய்வகாரியங்களில் பங்கெடுக்கும் மார்க்கங்கள் நிரம்பவே உண்டு. சமூகத்திலும் குடும்ப உறவினர்களிடமும் தகுந்த புகழ் கிடைக்கும். புதிய டாகும். அநாவசிய பயணங்களைச் செய்ய வேண்டாம். சிறந்த சாதனை படைத்து பாராட்டு களும் விருது களும் பெறுவார்கள். சாகசங்கள் நிகழ்த்தி பரிசு பெறுவார்கள். மனம் ஆன்மிக வழியை அதிகம் நாடும். பேசும் வார்த்தைகளில் அனல்




வீசும். நற்செயல்கள் செய்வதினால் புகழ், பலம் பெறுவீர்கள். வீடு கட்டும் வாய்ப்புகளும் வாகனம் வாங்கும் யோகமும் உண்டு.

**மாணவர்கள்:** மாணவர்கள் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். விரும்பிய பாடப் பிரிவுகளைப் பெற்று மகிழ்வீர்கள். விளையாட்டில் பரிசுகளைப் பெறுவீர்கள். பெற்றோர் உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள். மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் சார்ந்த துறைகளில் மாணவர்கள் பணிபுரிவதற்கான தகுதியை பெறுவார்கள். பொதுவில் நல்ல முறையில் படித்து தேர்ச்சி பெறுவார்கள். நண்பர்கள் எல்லா வகையிலும் உதவி புரிவார்கள். ஆயுள் பலம் பெறும். சுற்றுலா சென்றுவரும் வாய்ப்புகள் மன நிறைவைத் தரும்.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு பணம் கையாளும் போது கவனத் துடன் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்லும் நிலை உருவாகும். மற்றவர்கள் ஆலோ சனை கேட்டு உங்களை நாடி வருவார்கள்.

**அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு உங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். எதிர் நோக்கியிருக்கும் சவால்களையும் முடிப்பீர்கள். சுவாரசியமான நபர்களை சந்திக்கும் வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் திறமைகளை அவர்களிடம் எடுத்துக் காட்டுவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் உங்களுக்குக் கிடைக்கும். பொறுப்புகள் மாறும். அதிக கவனத்துடன் பொறுப்புகளை கையாள வேண்டும். மேலிடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும்.

பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் குல தெய்வ பூஜை மற்றும் முன்னோர் வழிபாடு செய்யுங்கள்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி.

**அதிஷ்ட எண்கள்:** 2, 5, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் தினத்தை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட வழிபாடு





(யாழ்ப்பாணம்)

உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கு இணங்க தமிழ் மக்கள் தமது சூரியக் கடவுளுக்கு நன்றி தெரிவித்து தைப்பொங்கலை கொண்டாடி வருகின்றனர்.

அதற்கிணங்க, யாழ்.நல்லூர் கந்தசுவாமி, தெல்லிப்பழை துர்க்காதேவி, வல்லிபுரம் ஆழ்வார் மற்றும் வவுனியா கந்தசாமி ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது பக்த அடியார்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பொங்கல் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். (6)



# நெல் அறுவடை விழா



(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன்புலோ கமக்கார அமைப்பினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நெல் அறுவடை மற்றும் மூத்த கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி மற்றும் வடமாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி கைதடி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது சகலகலாவல்லி வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள வயலில் சம்பிரதாய முறைப்படி விருந்தினர்களால் அரிவி வெட்டி நெற்கதிர்கள் எடுக்கப்பட்டு அறுவடை விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சகலகலாவல்லி வித்தியாலயத்தில் மாணவர்களுடைய கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் மறவன்புலோ பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்ற மூத்த விவசாயிகள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. (6-30)


## கிருஸ்ணா அடைவு கடை

**பதிவு இல J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2024 ஆம் ஆண்டு (31.03.2024) இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (28.02.2025) முன்னர் மீட்கவும்.

மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 28.02.2025 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(குறிப்பு: 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் (2024.02.28) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல: 370, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311, 021 222 5180,**
**077 080 4656**

**உரிமையாளர்**
**இல: 09,**
**கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(2991)


## சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, சபைக்கு சொந்தமான கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் 18.12.2024 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் NP/14/41(1)/04/Gen03/01/2024 இலக்க 17.12.2024 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பிற்போடப்பட்டிருந்த குறித்த கேள்வி திறத்தலானது, வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A4/Com/27/2025 ஆம் இலக்க 03.01.2025ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் இரத்துச்செய்யப்படுகிறது என்பதனை அறியத்தருகின்றேன்.

குறிப்பு:- விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொண்டவர்கள் செலுத்தப்பட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தை பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**
**15.01.2025**

(சி-2038)

## அதிகரித்த டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த வருடத்தில் இது வரையான காலப் பகுதியில் 2,045 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

15.01.2025
தை 02, புதன்கிழமை
துதியை பின்னிரவு 4.44 மணிவரை
பூசம் முற்பகல் 11.52 மணிவரை

சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
மாட்டுப் பொங்கல்

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

**வளவன்**

**மேஷம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் நாள், பெற்றோர் நலனில் அக்கறை கூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** பயணங்களால் . பலனுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**ரிஷபம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உடன்பிறப்புக்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள்.

**சிம்மம்:** விருந்தினர்கள் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, விருந்தினர்களின் வருகையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வதுடன் குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், தொழிலில் எதிர்ப்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப் பழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மீனம்:** நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு.

**அறிவும், ஒழுக்கமும் ஒரு வண்டியின் இரண்டு சக்கரங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகளுடன் புதுவருடம் புதிரெடுத்து பசிதீர்த்து பதிசிறக்கட்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தமிழர் தம் வாழ்வில் பொங்கல் திருநாள் சிறப்பாகவே கொண்டாடப் படுகின்றது. ஒவ்வொரு குடும்பத் திற்கும் (பதிக்கும்) இத்திருநாள் வாழ் வில் ஒளியேற்றும் நன்நாளாகவே போற்றப்படுகின்றது. பஞ்சம், பட்டி னியகன்று அனைவருக்கும் உணவு கிடைக்கும் வருடமாக நலிவுற்றி ருக்கும் மக்களுக்கான ஊட்டச்சத் தையும் உற்பத்தி செய்து அனை வரும் சுகதேகிகளாக குடும்பநலம் பேணி வாழ்வாங்கு வாழ வழி செய் யும் என அனைவரும் எதிர்பார்த்திருக் கின்றனர்.

விவசாய செய்கையிலீடுபடும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சிறப்பான கொண்டாட்டமென்றாலும் தினந்தினம் வாழ்வாதாரத்திற்குள் சிக்கிச்சிதையும் குடும்பங்களுக்கும் இத்திருநாள் நன்மைகள் பல தந்து இவ்வருடத்தில் உயர்வுபெற வழி செய்யும் என நம்புவோம். நம்பிக் கையே வாழ்க்கை. தன்னம்பிக் கையே அதற்கான உந்துதல். அனை வரும் வாழ்வாங்கு வாழவேண்டும் என வாசக உறவுகளுடன் நாமும் மனதார வாழ்த்துகின்றோம்.

இவ்வருடம் வழக்கம் போல புதுமைகளை அள்ளித்தரவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு அனைவருக் கும் உள்ளது. பொருளாதார சரி வினால் மக்களின் வாழ்வாதாரம் தடுமாறிப்போயிருக்கின்றது. விலை கள் பலமடங்கு உயர்ந்து விட்டன. இருபது ரூபாவிலிருந்த சோளம் பொத்தி நூறாகிவிட்டது. இது வொன்றே உதாரணமாகி விலை களை உயர்ந்திருப்பதை பொருளாதார சரிவு காரணமாகி விட்டது.

இவ்வருடம் பொருளாதார மீட்சி யென்பதனை ஓரளவிற்கு உறுதிசெய் வதற்கு எமது உற்பத்தியும் கணிச மான அளவு பங்களிக்க வேண்டும். பொருளாதார சரிவு சரிப்பட்டாலும் அதிகரித்த விலைகள் இறங்க மறுக் கும். அள்ளியெடுத்த பணத்தை ஏந்திய படியே வர்த்தக கைகள் ஏங்கிநிற்கும். எந்த நிலைமையையும் அனுசரித்து செல்லும் வாழ்க்கை முறையில் வாழப்பழகிய எம்மவர்களுக்கு இவ் வருடத்தில் நிகழப்போகும் மாற்றங் கள் உறுதுணையாக இருக்கும் என நம்புவோம். மாற்றம் நிகழவேண்டும் மாறுதல்கள் அனைவருக்கும் அனு கூலமானதாக அனைவரும் நன்மை பெறும் விதத்தில் எமக்கான வாழ்க் கையை வாழ வழிசெய்தல் வேண் டும்.

ஆட்சி மாற்றங்கள் மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தை வலுவடையச் செய்தல் வேண்டும். தேசத்தின் வளர்ச்சியும் அபிவிருத் தியும் உற்பத்தி பொருட்களின் தரத் திலும் அளவிலும் இன்னும் மதிப்பேறி உலக சந்தைக்குள் உள்வாங்கப்படும் நிலைமையை உருவாக்கும் நிலை எழவேண்டும். அந்நிய செலாவாணி விடயத்தில் வடமாகாணத்தின் பங் களிப்பு மிகவும் குறைவு. எமது உற் பத்தி உலகசந்தையில் போட்டிபோடும் நிலைக்குயர்ந்தாலன்றி அந்நிய செலாவாணியில் அதிகரிப்பு இருக்காது. பிறநாடுகளிலிருந்து உலகசந்தையில் உலாவரும் பனம் பொருட்கள் எமது தேசத்திலிருந்து இல்லை.

இந்த இடைவெளி நிரப்பப்படல் வேண்டும். உலகமயமாக்கலில் பிற தேசம் புகுந்தோர் நல்லெண்ணமாக நம்மூர்வந்து இங்குள்ள வளங்களை, இயற்கைவளத்தை இன்னும் சேதன கழிவுகளை மீள்சுழற்சி செய்யக்கூடிய எளிமையான தொழில்நுட்பங்களை உள்வாங்கி தனிமனித குடும்ப பொருளாதார சரிவிற்கு ஆறுதல் தர வேண்டும். எமது வளங்களை சுரண்டு

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



தல் என்னும் போர்வைக்குள் இல்லாது இருக்கின்ற வளங்களை வினைத் திறனாக மாற்றும் காரியங்களுக்கு முன்னுரிமை தரப்படல் வேண்டும்.

மக்களின் வாழ்வாதாரம் சிறக்கும் நிலைமை ஏற்படவேண்டும். தொழி லென்றும் வாழ வழிசெய்கிறோமென் றும் வந்து தமது வளர்ச்சியை மட்டும் குறித்தியங்கும் நிறுவனங்கள் வாழ் வாதாரத்தை நம்பி எமது மக்கள் மீண் டும் செயற்கை சிறையிலிருக்க வழி செய்யாதீர். அவரும் அவரவர் குடும்பங் களும் தமது கால்களில் ஊன்றி நிற்க அதற்கான பொறிமுறையை அமைத்து நடைமுறைப்படுத்தல் நன்று அது இறைசெயலுமாகும்.

எமது தேசத்தில் போரோய்ந்த பின் னர் வந்து செயலாற்றிய பிறதேசத்து நிறுவனங்கள் பல திட்டமிட்ட ஆண்டு களுக்கு மட்டும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியபின் அதன் பயன் பாடுகள் எவ்வாறு மேற்கொண்டு செய லாக்கம் பெறும் என்னும் எந்த அடிப் படை வரையறையே இல்லாது அவ ற்றை கண்காணிக்கும் பொறிமுறை யும் இல்லாது காரியம் முடிந்தபின்னர் கழன்றுவிடுகின்றனர்.

செலவு செய்தவரை அனைவருக் கும் நன்மையே ஆனால் அதுவே முதலாக தொழில்துறையை விருத்தி செய்யும் நம்பகத்தன்மையை இழந்து விடும் நிகழ்வுகளால் அதிகமாகி விட் டது. இதனால் நிவாரணத்திலேயே குடும்பத்தை நகர்த்த நினைக்கும் எந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் மறுநாள் வாழ்வுக்கு உணவு சமைக்கும் செயற் திறன் இவ்வாறான அனைத்து திட்டங் களுக்குள்ளும் இல்லாதிருந்ததுவும் மிகமுக்கிய காரணங்களாகும்.

எம்மவர் வாழ்வியலில் நாமே நம்பிக்கையற்றிருந்தால் எமக்கான விடிவு என்பது [illegible] காணப்படும். நம்பிக்கை கொண்ட சமூகமாக நாம் அனைவரையும் ஒன் றிணைக்கும் செயலூக்கத்திற்கு முன் னிற்போம். எமது உற்பத்தியை நெறிப் படுத்தி விளைச்சலை அதிகரிப்பதற் கான முன்னேற்பாடுகள் அவசியம் எடுத்தாக வேண்டும். வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்பங்கள் அனை வருக்கும் கிடைக்க வழிசெய்தல் அவ சியமானதாகும்.

இதனோரம்சமமாக மக்களை வளப்படுத்தும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் மூலம் அவர்களையும் எமது அபிவிருத்தியின் நீரோட்டத் திற்குள் இலகுவாக இணைத்துக் கொள்ள முடியும். தகவல் தொழில் நுட்பம் விஸ்வரூபமெடுக்கும் காலங் களாக எதிர்காலம் இருக்கப்போகின்றது என்பது மட்டும் நிதர்சனம். இளைய சமூகத்தை இதன்பால் நகர்த்துவது அவசியமாகும். இதன் மூலம் அவர்க ளுக்கான வேலைவாய்ப்பு, தொழில் விருத்தி என்பன அனைவருக்கும் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது.

இவையனைத்தும் ஒருபக்கமிருக்க எமது சுகாதாரத்தில் நெகிழ்ச்சித் தன்மை உருவாகிக் கொண்டிருக் கின்றது. எங்கும் எவரையும் கேட் டாலுமே புற்றுநோயால் அவதிப்படும் குடும்ப உறுப்பினர்கள் இருப்பதும் வயது, பால் வேறுபாடின்றி மக்களில் புற்றுநோய் அதிகரிக்கும் தன்மை காணப்படுகின்றது.

எமது மருத்துவத்துறை முழுமை யான பங்களிப்பை நல்கியும் பல நோய் களின் உருவாக்கம், பரவல் என தினந் தினம் பலமக்கள் அல்லலுறுகின்றனர். நாம் உண்ணும் உணவு நிறையுணவு என்பதற்கப்பால் நஞ்சற்ற உணவென் பதனை நிர்ணயஞ்செய்யும் வரை யறைகள், அவற்றை உற்பத்தியாக்கும் கட்டுப்பாடுகள் இன்னமும் இறுக்கமாக இருந்தால் மட்டுமே எமது வருங்கால சுகதேகிகளான சந்ததியை நாம் கொண் டிருக்க முடியும். வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் பலவகையான உண வுப்பொருட்களில் அதிகம் பீடைநாசி னிகள் செறிந்திருக்கும் உண்மைகள் பல வர ஆரம்பித்துவிட்டன.

முறையான சிகிச்சையின்றி,பரா மரிப்பு இன்றி எம்மை தேடிவரும் நோய்களிலிருந்தும் எம்மவர்களை காப்பாற்றவேண்டும். தொற்றாநோய் [illegible] குடும்ப சுகாதாரம் வரையறை செய்து கொள்ளவில்லை. மாறாக தொற்றுநோய்களையும் கவ னத்திலெடுத்து அவற்றுக்கான தடுப் பூசிகள் மற்றும் மருந்து வகைகள் கிடைத்திட ஆவனசெய்திடல் அவ சியம். எமது தேசத்து சுகாதாரத் துறையின் பங்களிப்பு மிகவும் போற் றுதற்கரியது. சிறந்த செயற்றிறனுடன் இயங்கும் இத்துறையும் மக்களாகிய நாமும் ஒன்றிணைந்து அனைத்து சவால்களையும் வெல்ல வேண்டும்.

கொவிட்-19 போல இன்னொரு தொற்றுநோயை எமது தேசம் காணக்கூடாது. முறையாக கவ னிக்க முடியாமலும் பரிகரிக்க முடியாமலும் பலர் தவித்த தவிப்பு அந்நேரத்தில் காணமுடிந்தது. மருத் துவத்துறையிலேயே இழப்புக்களை ஏற்படுத்திய நோயது. தனிமைப் படுத்தல், பரிகரித்தல் என்பன மேற்கொண்டும் இந்நோயினால் பலர் இறப்புக்களை சந்தித்தனர். குறிப்பாக உடலில் எதிர்ப்புத் தன்மை நலி வடைந்திருந்தவர்கள் இந்நோயி னால் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்புக்களைப் பெற்றதால் இந்த நிலை உருவானது. தற்போது சீனா வில் கொவிட்- 19 போன்ற இன்னொரு வைரஸ் பரவ ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வருகின்றன.

எமக்கு இது இன்னும் அதிகளவில் உணரப்படாததால் நாம் எந்த வித கரிசனையும் கொள்ளவில்லை. நிலைமை மாறும் போது மீண்டும் அந்தத் தனிமைப்படுத்தல் யுகத் திற்குள் செல்லவேண்டியும் ஏற்பட லாம். எனவே இவ்வாறான தொற்று நோய்கள் வராது தடுக்கும் பொறி முறைக்கு நாம் ஒத்திசைவாக இருத்தல் அவசியம்.

சந்தைப்படுத்தல் காலங்காலமாக முழுமையாக சீர்செய்யப்படா மலேயே தவித்திருக்கின்றது. இதனை முறையான பொறிமுறைக்குள் உள் ளீர்த்தால் விவசாய விளைபொருட் களுக்கான சிறந்த விலையை விவ சாயபெருமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களை பயிர் அழிதல் அல்லது பயிர் நோய்ப்படுதல் செயலுக்குள் உள்வாங்கிக் கொள்ள முடியும்.

விவசாயத்தையும் விவசாயி யையும் காப்பாற்றும் பொறிமுறை கள், அதற்கான சட்ட திட்டங்கள் அனைத்தும் இன்னும் செம்மைப் படுத்தப்பட்டு விவசாய அபிவிருத்தி யின் முன்னகர்தலை இவ் வருடம் மேற்கொள்ளும் என முழுமையாக நம்பலாம். எமது முறையான பங்க ளிப்பு இந்த அனைத்து செயலூக்கத் திற்கும் தேவைப்படும். நாமும் அதற்கு தயாராகி எமது பங்களிப்பை முழுமையாக வழங்கினால் நாடு மீண்டும் புதுயுகம் நோக்கி நடை போடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகள் மற்றும் சபைக்குச் சொந்தமான கடை என்பவற்றினை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்வி மனுக் கோரல் அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15.01.2025 தொடக்கம் 28.01.2025 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 29.01.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 29.01.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

### கேள்வி அட்டவணை

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT2/01 | ரூபா 12,000,000.00 | ரூபா 50,000.00 | ரூபா 180,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT2/02 | ரூபா 10,800,000.00 | ரூபா 45,000.00 | ரூபா. 162,000.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/01 | ரூபா 2,400,000.00 | ரூபா 10,000.00 | ரூபா 36,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/02 | ரூபா 1,920,000.00 | ரூபா 8,000.00 | ரூபா. 28,800.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/01 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/02 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/04 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/05 | ரூபா 1,800,000.00 | ரூபா 7,500.00 | ரூபா 27,000.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/06 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/07 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |
| LDSP/PT3/08 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள நகர சபைக்கு சொந்தமான கடை

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| NBS 02 | ரூபா 1,680,000.00 | ரூபா 7,000.00 | ரூபா 25,200.00 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிட குணநல சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டையின் பிரதி என்பவற்றுடனும் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் , சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. நிர்ணயிக்கப்பட்ட கேள்வித் தொகையை விட குறைவாகக் கோரப்படும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் அவற்றுக்கான கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
13. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மற்றும் கேள்வி தொடர்பாக எந்தவொரு இறுதி முடிவினையும் எடுக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
14. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி 15.01.2025** (சி-2037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்த தான முகாம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகளின் அனுசரணையுடன் 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் 42 ஆவது இரத்த தான முகாம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரத்தவங்கியில் இடம்பெறவுள்ளது.

எனவே குருதிக் கொடையாளர்களை குறித்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

## 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய சங்காபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி 9.30 இற்கு திரவிய அபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசையும் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு விசேட பூஜையினைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை தொடர்ந்து திருவூஞ்சல் பாட்டு இடம்பெற்று அம்பாள் உள் வீதி, வெளி வீதி வந்து கிராமப்பிரவேசம்(வீதியுலா) நடைபெறும் என தேவஸ்தான பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (6)

## சீர்செய்யப்பட்ட தெரு விளக்குகள்




(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நீண்ட காலமாக ஒளிராத நிலையில் காணப்பட்ட பல வீதிகளின் தெரு விளக்குகள் பருத்தித்துறை பிரதேச சபையால் கடந்த வெள்ளிக்கிழமை சீர் செய்து வைக்கப்பட்டது.

இரவு நேரங்களில் விபத்துக்களை ஏற்படுத்தும் முக்கிய இடங்களில் தெரு விளக்குகளை பொருத்துமாறு அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-60)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974
(559)


# ஆரம்பமானது அவனியாபுரம் ஜல்லிக்கட்டு

# சீறிப்பாய்ந்த காளை மாடுகள்

(சென்னை)

**உலகப் புகழ்பெற்ற அவனியாபுர ஜல்லிக்கட்டு தைப்பொங்கல் தினமான நேற்று மதுரையில் களை கட்டியது.**





மதுரையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நேற்றுக் காலை 7மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் கோலாகலமாகத் தொடங்கியது.

இந்த ஆண்டு போட்டியில் 1,110 காளைகளும் 900 மாடுபிடி வீரர்களும் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு உற்சாகமான பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. காளை மாடுகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப் பட்டதன்பின் அவிழ்த்து விடப்பட்டது.

அதேபோல் காளைகள் பிடிக்கும் வீரர்களுக்கும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. இதன்போது 1,500 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இப் போட்டியின் போது வீரர்கள் பத்துப்பேர், மாடுகளின் உரிமையாளர்கள் பதினொரு பேர் மற்றும் பார்வையாளர் இருவர் என இது வரை 23 பேர் காயமடைந்துள்ளனர். (நி-6)

## ட்ரம்பின் பதவியேற்பு விழாவில் இந்திய வெளிவிவகார அமைச்சர்



(டில்லி)

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் பங்கேற்கவுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் 20 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் கலா நிதி சுப்ரமணியம் ஜெய்சங் கர் பங்கேற்கவுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 80 நாடுகளின் அரச தலைவர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கவுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

## பிரேசிலில் நிலச்சரிவு 10 பேர் உயிரிழப்பு

(ப்ரசிலியா)

தென்கிழக்கு பிரேசிலில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இபடிங்கா நகரில் ஒரு மணி நேரத்திற்குள் சுமார் 80 மில்லிமீற்றர் மழை பெய்தமையால் அப் பகுதி முழுவதும் நிலச்சரிவுகளுக்கு உள்ளாகியிருந்தன.

இந்நிலையில் நிலச்சரிவால் அழிக்கப்பட்ட வீட்டின் இடிபாடுகளுக்கு அடியில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவனும் இதுதவிர அருகிலுள்ள நகரமான சாண்டானா டோ பரைசோவில் மற்றொரு உடலையும் மீட்புக் குழுவினர் மீட்டனர்.

இதுவரை நிலச்சரிவில் சிக்கி பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

நகரின் பெத்தானியா பகுதியில் உள்ள மலையின் ஓரத் தில் உள்ள ஒரு தெருவில் ஏற்பட்ட மற்றொரு நிலச்சரிவு அதன் பாதையில் இருந்த அனைத்தையும் அடித்துச் சென்றது. இந்நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் காணாமல் போயிருந்தார்.

அவரின் நிலைமை குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை. மேலும் அந்த நபரின் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுக்கடங்காத காட்டுத்தீ திணறும் வல்லரசு!

## ஒரு கோடி பேரை வெளியேற்றத் திட்டம்
## இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கட்டடங்கள் தீக்கிரை



(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தீ தொடர்ந்து பரவுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கவுண்டில் உள்ள ஒரு கோடி பேரையும் வெளியேற்ற கவுண்டி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத் தீ ஆறாவது நாளான நேற்று முன்தினமும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கிறது. இந் நிலையில் காட்டுத் தீயைக் கட்டுப் படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் அண்டை மாகாணங்களில் இருந்து தண்ணீர் லாரிகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

ஹெலிகொப்டர்கள் வாயிலாக, கடல் நீரால் தீயை அணைக்கும் முயற்சிகளும் நடக்கின்றன.

இதற்கிடையே அந்தப் பகுதியில் 110 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. காற்றின் வேகம் அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளது. இதைத் தவிர மேலும் பலரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகர் உள்ளிட்டவை அடங்கிய லாஸ் ஏஞ்சலஸ் கவுண்டி பகுதிகளில் 20,000இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீக்கிரையானதாகக் கூறப்படுகிறது.

கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தீ பரவி வரும் நிலையில் ஏற்கனவே 10 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 40 விவசாயிகளை சுட்டுக்கொன்ற கொடூரக்கும்பல்-நைஜீரியாவில் சோகம்

(அப்யூஜா)

நைஜீரியாவில் 40 விவசாயிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர்னோ மாகாணத்தின் மோகுன்னே கிராமத்துக்குள் இரவு ஆயுதமேந்திய கும்பல் ஒன்று புகுந்து அங்குள்ள விவசாயிகளைச் சரமாரியாக சுட்டுவிட்டுத் தப்பி யுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் வடகிழக்கு பகுதியில் ஆயுதமேந்திய கும்பல்கள் செயற்பட்டு வருகின்றன.



பழமைவாதிகளான இவர்கள் மேற்கத்தேய கலாசார தழுவலைக் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். இந் நிலையில் தான் விவசாயத்தில் நவீனமயமாதலை கொண்டு செயற்பட்டு வரும் விவசாயிகள் வசிக்கும் கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வருவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 40 விவசாயிகள் சம்பவ இடத்திலேயே உடலில் குண்டு பாய்ந்து உயிரிழந்துள்ளதுடன் பலர் காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பதவியேற்கவுள்ள ட்ரம்ப் இராஜினாமா செய்த வழக்கறிஞர்

(வோஷிங்டன்)

அமெரிக்க நீதித் துறையின் சிறப்பு வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த அரசு வழக்கறிஞர் ஜாக் ஸ்மித் தனது இராஜிநாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்க உள்ள நிலையில் அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்த அரசு வழக்கறிஞர் ஜாக் ஸ்மித் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.





தேர்தல் முடிவுகளை மாற்ற முறைகேட்டில் ஈடுபட்டது, அரசு ஆவணங்களைக் கையாடல் செய்தது ஆகியவை தொடர்பாக கடந்த 2020 ஆம் ஆண்டு ட்ரம்பிற்கு எதிராக ஜாக் ஸ்மித் வழக்கு தொடர்ந்திருந்தார்.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றபின் ஜாக் ஸ்மித் பணியில் இருந்து நீக்கப்படுவார் என ட்ரம்ப் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஜாக் தற்போது இராஜிநாமா செய்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா எங்களை அழைத்தால்

## எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவோம்

### வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு



(வவுனியா)

அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால் வோஷிங்டனுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திர மான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் எனக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரி வித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர். மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை மீண்டும் பெறும் வரை இடைவிடாத போராட்டத்தின் 2886 ஆம் நாளில் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக்கையை தொடர்ந்தும் முன்வைக்கின்றோம். எதிர்கால இனப்படு கொலைகளைத் தடுப்பதும் தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச அதரவைப் பெறுவதும் எமது நோக்கமாகும்.

மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சுகந்திர உலகின் தலைவர் டொனால்ட் டரம்ப் அவருக்கு வரவிருக்கும் காலத்தை அமெரிக்கா தீர்க்கமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாம் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் தமது பிள்ளைகளது படங்களையும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் தாங்கியவாறு கண்ணீர் மல்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (8-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 240 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 1000 |
| தக்காளி | 400 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 220 |
| கோவா | 180 | 250 | 250 |
| கரட் | 250 | 400 | 300 |
| பூசணி | 140 | 120 | 150 |
| புடோல் | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 380 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 350 |
| பாகற்காய் | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 850 | 600 | 400 |
| லீக்ஸ் | 280 | 350 | 300 |
| பீற்றூட் | 650 | 550 | 500 |
| கறிமிளகாய் | 850 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 |
| போஞ்சி | 400 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | .200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600 |
| முள்ளங்கி | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 180 |
| வல்லாரை | 60 | 70 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 |

# இன்று ஒரு தகவல் 300



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## குழந்தையும் காதும்!

உங்கள் பையன் எப்படி சேர் இருக்கிறான் என்று விசாரித்தார் ஒருவர்.

அவன் என்ன சேர்.. எதைச் சொன்னாலும் காதிலே வாங்கமாட்டேன் என்கிறான். அவன் பாட்டுக்குப் போகிறான், வருகின்றான் என்று சொல்லி அலுத்துக் கொண்டார் அப்பா.

பெரியவர்கள் சொல்வதைச் சிறியபிள்ளைகள் கேட்பதில்லை என்பது ஒரு குறை. பெரியவர்கள் சொல்வது சிறியபிள்ளைகள் காதிலேயே விழுவதில்லை என்பது ஒரு குறை. இது கொஞ்சம் சீரியஸான விடயம். அதைக் கவனித்துப்பார்க்க வேண்டும்.

ஒரு குழந்தைக்கு காது சரியாகக் கேட்கிறதா இல்லையா என்பதை நாம் கவனித்துப் பார்த்து சரியாகக் கண்டுபிடிக்க வேண்டும். அதுவாக நம்மிடம் தவழ்ந்து வந்து அப்பா எனக்கு காது கேட்கவில்லை வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்காது.

அது சரி ஒரு குழந்தைக்கு காது சரிவர கேட்கிறதா இல்லையா என்பதை முன் கூட்டியே நாம் தெரிந்து கொள்வது எப்படி? அதற்கு சில வழி இருக்கிறது. உங்கள் குழந்தையை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள் அடிக்கடி ஜலதோசம், காதிலே வலி எற்படுகிறதா? மூக்கு விரிவாகவும் தொன்சில், அடினாய்டு சதை அழற்சியும் இருக்கிறதா? வாயிலிருந்து எச்சில் வருகிறதா? குழந்தை வாயினாலே சுவாசிக்கிறதா? பற்கள் முன் தள்ளி வளருகிறதா? இது எல்லாம் அதற்கு அறிகுறி.

அதன்பின் V, B, D, F, TH ஆகிய இந்த ஒலிகள் சேர்ந்த வார்த்தைகளை குழந்தை சரியாகப் புரிந்து கொள்ளாது. இப்போது உதாரணத்திற்கு but என்று சொல்லு குழந்தை என்றால் அது cut என்று சொல்லும்.அதாவது but என்ற சொல்லின் ஒலியை அதனாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அதன் பின் உங்கள் குழந்தை உங்களை உரக்கப் பேசச் சொல்லுகின்றானா? அடிக்கடி கேள்வி கேட்கின்றானா? சாப்பிடும் போது கவனம் இல்லாமல் இருக்கின்றானா? படிப்பிலே போதுமான முன்னேற்றம் இல்லையயா? வகுப்பை சரியாகக் கவனிப்பது இல்லையா? இப்படி எல்லாம் இருந்தால் ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு போய் சிகிச்சையை ஆரம்பித்து குணப்படுத்தி விடலாம்.

குழந்தைக்கு காது கேட்கவில்லை என்றால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அவனுக்கு காது கேட்கவில்லை என்பதற்காக அவன் முன்னாலே சத்தம் போட்டுப் பேசக் கூடாது. மெதுவாக சீராகப் பேசுங்கள். அவனைப் பார்த்து பேசுங்கள். உங்கள் உதட்டு அசைவுகள் அவனுக்கு உதவும். நீங்கள் வாயிலே வெற்றிலைபாக்கு போட்டு கொண்டே, புகைப் பிடித்து கொண்டோ பேசாதீர்கள். அப்படி பேசினால் அவனாலே உங்கள் உச்சரிப்பை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. ஒரு வார்த்தையைச் சொல்கின்றீர்கள்.அந்த வார்த்தை அவனுக்குப் புரியவில்லை. அப்படி என்றால் அதே வார்த்தையை மறுபடியும் சொல்லுங்கள். அவனுக்கு நீங்கள் முதலிலே சொன்ன வார்த்தை புரியவில்லை என்று நினைத்துக் கொண்டு மறுபடியும் சொல்லுகின்ற போது அதே அர்த்தம் வரக்கூடிய வேறு வார்த்தையை சொல்லக் கூடாது.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் அவனுக்கு மனதிடத்தினை ஏற்படுத்த முடியும். இல்லை என்றால் அவனுக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிடும். குழந்தைக்கு காது கோளாறு என்றால் ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு போனால் போதும் குணப்படுத்தி விடலாம். பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்து விட்டால் தான் கஷ்டம்.


சில பேர் கோபத்துலே சிறிய பிள்ளைகளின் காதைப் பிடித்து திருகுவார்கள். அது மிகவும் தவறு. காது கையோடு வந்துவிட்டால் என்ன செய்வது. ஒரு கதை சொல்கின்றேன் கேளுங்கள். ஒரு வீட்டிலே அப்பா அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இதோ பார் நாளைக்கு காலையிலே என்னை சீக்கிரமாக எழுப்பிவிடு. நான் செங்கல்பட்டு வரைக்கும் போய்வர வேண்டியிருக்கிறது என்றார். அதை அவர் பையன் காதிலே வாங்கிக் கொண்டிருந்தான். அப்பாவுக்கு சிரமம் வேண்டாமே என்று நினைத்து அவனே காலையில் யாருக்கும் தெரியாமல் எழுந்து புறப்பட்டு செங்கல்பட்டு வரைக்கும் போய்விட்டான். சாயந்தரமாக திரும்பி வந்தான். அப்பா பையனைக் காணவில்லை என்று அலைமோதிக் கொண்டிருந்தார். சாயந்தரமாகப் பையனைப் பார்த்ததும் எங்கே போய் வந்தாய் என்றார் கோபமாக. செங்கல்பட்டு வரை போய் வந்தேன் அப்பா. நீ வீணாக அலையக் கூடாது என்று .

எதற்குக் போனாய் என்று அதட்டினார். அது தான் அப்பா நீ நேற்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாய் அதைக் காதிலே வாங்கினேன். உனக்காக நான் போய் வந்தேன் என்றான். உடனே எந்தக் காதிலே வாங்கினாய் என்று சொல்லி காதைப் பிடித்து திருகினார். அந்தக் காது கையோடு வந்துவிட்டது. இது நடந்து சிறிது நாட்கள் கழித்து அந்த அப்பாவும் பையனும் கடைத்தெருவிலே நடந்து போய்கொண்டிருந்தார்கள். எதிரிலே ஒரு நாய் ஓடிவந்தது. அதற்கு இரண்டு காதும் இல்லை. என்ன இது இதற்கு இரண்டு காதும் இல்லை என்றார் அப்பா. அது இரண்டு தடவை செங்கல்பட்டுக்கு போய் வந்திருக்கும் என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 9 ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்து காணப்படும் புழுதியாறு நீர்ப்பாசனம்

## மக்கள் விசனம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாயவனூர் பகுதியில் கடந்த 2015ஆம் ஆண்டு சுமார் 39 மில்லியன் ரூபாய் செலவில் வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக் களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஒன்பது ஆண்டுக ளுக்கு மேலாக செயலிழந்த நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர்.

"கடந்த 1983 ஆம் ஆண்டு மலையகப் பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப் பட்டு மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்க ளைச் சேர்ந்த மலையகத் தமிழ் மக்களே மாயவனூர் பகுதியில் அதிகம் வசித்து வரு கின்றனர்

குறித்த பிரதேசத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் 39 மில்லியன் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் முற்று முழு தாக செயலிழந்துள்ளது.

2014, 2015 ஆம் ஆண்டுகளில் மாகாணத்திற் கென குறித்தொதுக்கப்பட்ட நிதி யிலிருந்து உணவுப் பயிர்ச்செய் கையை நோக்கமாக கொண்டு மாயவனூர் பிரதேசத்தில் நடை முறைப்படுத்தப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் தற்போது எவ்வித பயன்பாடுமின்றி காணப்படுகின்றது.

இவ்வாறு பெருந்தொகை யான நிதியைச் செலவிட்டும் குறித்த கிராமத்தில் வாழும் மக்களுக்கு எந்த நன்மைகளும் ஏற்படவில்லை.

மேலும் குடிநீர் வசதி யில்லை, வாழ்வாதார வசதி யில்லை மற்றும் வறுமை காரணமாக நாங்கள் பல் வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றோம் என் றும் மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர். (8-315)

# சிவசேனை அமைப்பு கிளிநொச்சியில் கவனயீர்ப்பு




(தருமபுரம்)

கிளிநொச்சியில் அண்மை யில் இந்து மதகுரு ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அவரது உருத்திராட்ச மாலை அறுத்தெறியப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி கோரி கிளிநொச்சி நகர் பிள்ளையார் ஆலயம் முன்பாக சிவசேனை அமைப்பினர் ஏற்பாடு செய்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்டது.

இதன் போது தேங்காய் உடைத்து தங்களின் கவன யீர்ப்புப் போராட்டத்தை மேற் கொண்டிருந்தனர்.

தாக்கப்பட்டவர் நீதி கோரி பொலிஸ் நிலையம் சென்ற போது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டவருடன் சமர சத்துடன் செல்லுமாறு கோரி யுள்ளமை வேதனையான விடயம் எனவும் ஆர்ப்பாட்டத் தல் ஈடுபட்ட மதகுருமார்கள் தெரிவித்துள்ளனர். (8-316)




முல்லைத்தீவு - பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்த தைத்திரு நாளை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் நேற்று முன் தினம் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

(படம்: சதீஸ்)

# கால் இறுதிப் போட்டிக்கு யூனியன்ஸ், டிறிபேக் தகுதி





மானிப்பாய் பரீஸ் விளை யாட்டுக் கழகம் 5 ஆவது தடவையாக நடத்தி வரும் 20 பந்துப் பரி மாற்றங்களை கொண்ட துடுப் பாட்டத்தொடர் நேற்று முன் தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இத் தொடரில் 2 ஆவது சுற்றில் யூனியன்ஸ் அணி, யாழ். ஜொனியன்ஸ் அணியை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 20 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 110 ஓட்டங் களைப் பெற்றனர்.

தரன் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 30 ஓட்டங்களையும் பெற்ற னர்.

களத்தடுப்பில் விதுஸன் 4 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், தனுஸன் 4 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றி னர்.

111 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமி றங்கிய யாழ். ஜொனியன்ஸ் அணி 19.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்ற னர்.

தேவபிரசாந்-19, சரூபன் 11 ஓட்டங்களையும், பிரிய தர்ஸன்-11 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிஸாருஜன் 4 ஓவர்களில் 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், தனுஷாந் 4 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றினர். போட்டியில் வெற்றி பெற்ற யூனியன்ஸ் அணி முதலாவது கால் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி டிறி பேக்ஸ்ரார் அணியை எதிர் கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இப் போட்டியில் மூலம் யூனி யன்ஸ் அணி 4.20 புள்ளி களையும் யாழ். ஜொனியன்ஸ் அணி 1.98 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (6)

# சுற்றுவேலியில் இருந்த தகரங்கள் இரவோடு இரவாக அகற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அம்பாள் நகர் பகுதியில் விவசாயக் காணியை சுற்றி அடைக்கப்பட்டிருந்த வேலித் தகரங்களை இர வோடு இரவாக சிவில் பாது காப்புத் திணைக்களத்தில் காவல் கடமையில் இருந்தவர் கள் கழற்றிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

குறித்த பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றை கால் நடைகளில் இருந்து பாதுகாக் கும் வகையில் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த குறி த்த தோட்டக் காணியின் வேலி



யில் காணப் பட்ட தகரங் களை கடந்த ஞாயிற்றுக்கி ழமை இர வோடு இரவாக சிவில் பாதுகா ப்பு துணைக் களத் தின் முகாமில் காவலில் இருந்தவர் களால் கழற்றிச் செல்லப்பட்டு குறித்த தகரங்கள் சில சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலகத்துக்குள் காணப்படு கின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்டவரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை சமரசப்படுத் தும் முயற்சியில் சிவில் பாது காப்புத் திணைக்களத்தின் அதிகாரி ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த பிர தேசத்தில் கசிப்பு மற்றும் கஞ்சா என்பவற்றை வெளியிடங்க ளில் இருந்து கொண்டு வந்து விற்பனை செய்துவருவதுடன் பல திருட்டுச் சம்பவங்கள் மேற் கொள்ளப்படுவதாகவும் பிர தேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். (8-315)

# போக்குவரத்து வசதியின்மையால் மாணவர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் மற்றும் எருவில் ஆகிய கிராமங்க ளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை காரண மாக 50 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று வருவதில் பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருகின்ற னர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிகுட்பட்ட குளம், மூன்று முறிப்பு கிராமத்திலி ருந்து 32 வரையான மாண வர்களும் எருவில் கிராமத்தில் இருந்து 27 வரையான மாண வர்களும் சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரம் பெரும் கஷ்டங் களுக்கு மத்தியில் [illegible] கண்டல் மற்றும் பாண்டியன் குளம் ஆகிய பாடசாலைக ளுக்கு சென்று வருகின்ற னர்.

குறித்த பிரதேசங்களுக் கான போக்குவரத்து வசதி யின்மை, வீதி புனரமைக் கப்படாமை எனப் பல்வேறு காரணங்களால் இந்த மாண வர்கள் மேலும் பாடசாலை சென்றுவருவதில் பல சிர மங்களை எதிர்நோக்கி வரு வதுடன் குறித்த பிரதேசத் திலே வாழுகின்ற பொது மக்களும் [illegible] குறிப்பிட் டுள்ளனர். (8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 681





"அணிந்து பாரேன்! அப்போது தெரியும்." "தாடி மீசையும் ஜடைமுடியும் எத்தனைநாளில் வளரும்?"

"அது என்ன பிரமாதம்? ஒரு நாளில் வளர்ந்து விடவேண்டுமென்றால் ஒரு நாழி கையில் கூட" அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைத்தேன்.

"என்ன நினைத்தாய்?" "ஒன்றுமில்லை. என்னைக் கட்டியிருக்கும் கட்டுக்களை அவிழ்த்துவிடு. நானும் உங்கள் கோஷ்டியில் சேர்ந்து விடுகிறேன்."

"போதும் போதும்! உன்னைப் போன்ற ஒற்றர்கள் இன்னும் யாரோ எங்கள் கூட்டத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் எங்கள் மகா சங்கம் இன்று அப்படி முடிந்தது."

"எப்படி முடிந்தது?" "மகா சங்கத்துக்கு இளவரசர் வரப் போகிறார் அவர் சிம்மாசனம் ஏறியதும், எங்கள் மகா குருவை இராஜ குருவாக ஏற்றுக் கொள்வதாய் வாக்களிக்கப் போகிறார் என்று காத்திருந்தோம்! இளவரசர் வரவேயில்லை."

"என்னைக் கட்டு அவிழ்த்துவிடு இளவரசர் ஏன் வரவில்லையென்று நான் தெரியப்படுத்துகிறேன்." "எந்த இளவரசர்?"

"வேறு யார்? கண்டராதித்தரின் குமாரர் மதுராந்தகர் தான்!" "நான் ஊகித்தது சரி!" "என்ன ஊகித்தாய்?" "நீ ஒற்றன் என்று ஊகித்ததைத்தான் சொல்கிறேன்." "எதைக் கொண்டு ஊகித்தாய்?"

"இளவரசரைத் தேடிக் கொண்டு வந்தபோது, இந்தக் காட்டுக்குள்ளிருந்து சிலர் வெளியேறுவதைப் பார்த்தேன். அவர்கள் இன்னார் என்று எனக்குத் தெரியும். நீ ஒற்றன் என்று சந்தேகித்துத்தான் அவர்கள் உன்னைக் கட்டிப் போட்டிருக்க வேண்டும். ஆனால் உன்னை உயிரோடு ஏன் விட்டுவிட்டுப் போனார்கள் என்றுதான் தெரியவில்லை."

"அதை நான் சொல்லுகிறேன் என்னைக் கட்டு அவிழ்த்து விடு!" "நீ ஒன்றும் சொல்ல வேண் டாம் உன்னைக் கட்டு அவிழ் த்து விடவும் முடியாது. நான் சொல்கிறபடி செய்கிறதாக ஒப்புக் கொண்டால்"

"உனக்குச் சம்பந்தமில்லாத விடயங்களில் தலையிடுவதில்லையென்று ஒப்புக் கொண்டு நூற்றெட்டுத் தோப்புக்கரணம் போட வேண்டும்!"

"அப்படியா சமாசாரம்?" என்றான் வந்தியத்தேவன். இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதெல்லாம் அவனுடைய கைகள் சும்மா இருக்கவில்லை. மெல்ல மெல்ல கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டேயிருந்தன.

"நூற்றெட்டுத் தோப்புக் கரணம் போட வேண்டும்" என்று காலாமுகன் கூறிய போது எல்லாக் கட்டுக் களும் அவிழ்ந்து விட்டன.

பாய்ந்தான் வந்தியத் தேவன், அவனைக் கீழே தள்ளினான். காலாமுகன் கையில் ஏந்தியிருந்த சுளுந்து பக்கத்தில் விழுந்தது. ஆனால் அடியோடு அணைந்து விடாமல் சிறிது வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது.

கீழே விழுந்த காலாமுகன் மார்பின்மீது வந்தியத்தேவன் ஏறி உட்கார்ந்து கொண்டு அவன் முக தாடியைப் பிடித்துக் குலுக்கினான்.

தாடி வந்தியத்தேவனுடைய கையோடு வந்து விட்டது. அதே சமயத்தில் காலாமுகன் வந்தியத்தேவனை உதறித் தள்ளிவிட்டு எழுந்து நின்றான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## துன்பமும் துடிப்பும்



ஒரு மனிதனுக்குக் காலிலே புண் வந்தது. வலி தாங்க முடியாமல் கால் வருந்தியது. அதனால் நடக்க முடியவில்லை. கால் படும் துயரத்தைக் கண்டு கண்கள் வருந்தின. வருந்திக் கலங்கின. கலங்கிக் கண்ணீர் வடித்தன.

மற்றொரு முறை கையிலே தீ சுட்டு விட்டது. கை உதறி உதறித் துடித்தது. அதைக் கண்ட போதும் அந்தக் கண்கள் வருந்தின. வருந்திக் கலங்கின. கலங்கிக் கண்ணீர் வடித்தன.

அதே மனிதனுக்கு முதுகிலே பிளவை வந்தது. துன்பங்கள் அடுத்தடுத்து ஒருவனையே வந்து வாட்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது அந்த மனிதனைப் பொறுத்த வரையில் உண்மையாயிற்று.

முதுகிலே பிளவை வந்ததால் முதுகால் தாங்க முடியவில்லை. சாயவும் முடியாமல், படுக்கவும் முடியாமல், முதுகு மிக மிகத் தொல்லைப்பட்டது. தம் பார்வைக்குத் தென்படாத முதுகுக்கு வலி வந்த போதிலும் கண்கள் வருந்தின. வருந்திக் கலங்கின. கலங்கிக் கண்ணீர் வடித்தன.

இப்படி ஒவ்வோர் உறுப்பிலும் ஏதாவது நோய் வந்தபோதெல்லாம் அந்தக் கண்கள் அவற்றைக் காணப் பொறுக்காமல் கலங்கிக் கண்ணீர்வடித்தன.

ஒரு முறை அந்தக் கண்களுக்கே துன்பம் வந்து விட்டது. ஒரு கண்ணில் ஏதோ ஒரு துரும்பு விழுந்து கண்ணை உறுத்தி வருந்தியது. துரும்பு விழுந்த கண்ணும் விழாத கண்ணும் சேர்ந்து துடிதுடித்துக் கலங்கின. அப்போது கண்கள் பட்ட துயரைக் கண்டு வேறு எந்த உறுப்பும் வருந்தவில்லை. கண்கள் இல்லாமல் போனால் கூட அவை அதற்காக வருத்தப்படப் போவதில்லை என்றே தோன்றியது. கை மட்டும் ஆதரவாக வந்து தன் விரல்களால் கண்ணில் விழுந்த துரும்பை எடுக்க முயன்றது. கண்ணிலிருந்து வடிந்த நீரைத் துடைத்து விட்டது.

"கண் அண்ணா, நீ எல்லோருக்காகவும் வருந்தினாய் ஆனால் உன் துயரத்தைக் கண்டு ஒருவரும் வருந்தவில்லையே!" என்று கூறி அதைத் தேற்றியது கை. மறுபடியும் காலிலே ஆணி குத்தியபோது கண்கள் கலங்கிக் கண்ணீர் வடிக்கத் தவறவில்லை. கால் தனக்காக வருந்தவில்லையே என்று அது நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

கருத்துரை:- பெரியவர்கள் பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகவே கருதி உருகுவார்கள். பிறர் தமக்காக வருத்தப் படவில்லை என்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருமே வெற்றியை விரும்புகின்றனர் ஆனால் ஒரு சிலரே அதற்காக உழைக்கின்றனர்.
~ சிசரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்திக்கு வந்த ஈ.வே.ரா இதுதான் உலக நியதி

பகுத்தறிவின் தந்தை எனப் போற்றப்பட்ட ஈ.வே.ராமசாமி பெரியார் தொடர்பில், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறிய கருத்துக்களால் தமிழக அரசியலில் கடும் புயல் வீசத் தொடங்கியுள்ளது.

ஈ.வே.ரா பெரியார் தொடர்பில் சீமான் கூறிய கருத்துகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எதுஎவ்வாறாயினும் ஒரு காலத்தில் பகுத்தறிவின் தந்தை எனப் போற்றப்பட்ட ஈ.வே.ரா பெரியாராலேயே தமிழகம் இத்துணை உயர்ச்சி கண்டது என்ற கருத்தியல் இருந்து வந்தது.

கடவுள் மறுப்புக் கொள்கையில் மிகவும் உறுதியாக இருந்த பெரியார், கடவுள் மறுப்புக் கொள்கையை இந்து சமயத்தின் மீதே திணித்தார் எனலாம்.

அதாவது மூடநம்பிக்கைகளை உடைத்தெறிய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த பெரியார், கடவுள் மறுப்புக் கொள்கையினூடாக பிராமண சமூகத்தை எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தார் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், அகண்ட பாரதத்தில் பிராமண ஆதிக்கம் இருந்துள்ளதை மறுப்பதற்கில்லை. வர்ணாச்சிரம தர்மத்தினூடு சாதியப் பாகுபாடு பேணப்பட்டது என்ற கோசங்களில் நியாயம் இருக்கவே செய்கிறது.

எனினும் மனித வாழ்வு என்பதற்குள் ஆன்ம சுகம் இருப்பதை பெரியார் கிஞ்சித்தும் நினைத்தாரில்லை.

அன்றைய சூழ்நிலையில் வறுமைப்பட்ட மக்களிடம் அறியாமையும் சேர்ந்திருந்தபோது, பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை தேவையாயிற்று.

ஆனாலும் அவர் கடவுள் மறுப்புக் கொள்கையை மிகவும் இறுக்கமாகக் கொண்டதன் காரணமாக இயற்கையின் நியமத்திலிருந்து விலகிவிட்டார் என்ற கருத்தியலும் அப்போது பலரிடம் இருந்தது.

ஆயினும் அன்றைய கால கட்டத்தில் பெரியாரின் வார்த்தைக்கு மாற்றுக்கருத்தை முன்வைக்க முடியவில்லை.

அதனால் அந்தக் கருத்துக்கள் உறங்கு நிலையில் இருந்தன.

இப்போது பெரியார் தொடர்பில் சீமான் முன்வைத்த கருத்துக்கள் பெரியாரை மிக மோசமாக விமர்சிக்கின்ற களத்தை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு பெரியாரை சந்திக்குக் கொண்டு வராமல், பெரியாரின் நாமத்தோடு கட்சி வளர்க்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை அடித்து விழுத்த முடியாது என்ற உண்மை உணரப்பட்டபோது, பெரியாரை விமர்சிக்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

அதேநேரம் சீமானின் தூற்றுதலில் இருந்து பெரியாரைக் காப்பாற்றத் திராவிட முன்னேற்றக் கழகம் கடும் பிரயத்தனம் எடுக்கின்றதாயினும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் முன்வைக்கின்ற ஆதாரங்கள் திமுகவினரைத் திணற வைக்கிறது.

கடந்த 60 ஆண்டுகளாக, எல்லாம் பெரியார் எனக்கூறி; மிகத் தொன்மைவாய்ந்த தமிழினத்தின் அறிவாற்றலை, மொழிவளத்தை, சான்றாண்மைமிக்க பெரியவர்களை, காப்பியங்களை ஓரந்தள்ளுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனக்கூறுகின்றார் சீமான்.

ஆக, பெரியார் இப்போது சந்திக்கு வந்துவிட்டார். இதுவே உலக நியதியாம்.

## நாட்டு மக்கள் பட்டினியால் அல்லலுறுகையில் நாட்டைச் சுத்தம் செய்ய விளைகிறது அநுர அரசு

### சந்திரசேன விளாசல்

நாட்டு மக்களைப் பட்டினியில் வைத்துக்கொண்டு நாட்டைத் தூய்மைப்படுத்த முடியாது எனச் சர்வஜன சக்தியின் உப தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாய்ச்சொல் வீரரே தவிர, செயல் வீரரல்ல என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம்.

நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்துள்ளது.

ஒரு இலட்சத்து 45 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான அரிசித்தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு தொடர்கிறது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் எழுந்த பிரச்சினைக்கு அரசாங்கம் முறையான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

இதனால் தான் சில்லறை அரிசி வர்த்தகர்கள் அரிசியைக் கொள்வனவு செய்ய முன்வருவதில்லை. அரிசிக்குத் தட்டுப்பாடு காணப்படுவதால் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறது.

விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இம்முறை பொங்கல் பொங்குவதற்கும் பச்சையரிசி இல்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 கிலோகிராம் அரிசியை நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கியதால் தான் பச்சையரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் சிறுபிள்ளைத் தனமாகக் குறிப்பிடுகிறது.

நாட்டு மக்களைப் பட்டினியில் வைத்துக்கொண்டு நாட்டைத் தூய்மைப்படுத்த முடியாது.

கோட்டாபய ராஜபக்ஷ சேதனப்பசளைத்திட்டத்தை அமுல்படுத்தியதைப் போன்று க்ளீன் ஸ்ரீ லங்கா செயற்திட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என்றார். (ம-7)

## திறக்கப்படும் வான்கதவுகள் வெள்ள அபாயத்தில் வன்னி

(கிளிநொச்சி)

முத்தயன்கட்டு நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்றிரவு திறக்கப்பட்டுள்ளன.

எனவே மக்கள் எச்சரிக்கையாக இருந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மழை இன்றும் தொடருமென எதிர்பார்க்கப்படும் நிலையில் இரணைமடு நீர்த்தேக்கத்தின் கதவுகள் திறக்கப்படும் அவசியம் ஏற்படக்கூடும். மேலும் தண்ணிமுறிப்பு நீர்த்தேக்கம் வான்பாயக் கூடும். ஆகவே குறித்த குளங்களின் கீழ்ப் பகுதியில் உள்ள மக்கள், குறிப்பாக விவசாயிகள் விழிப்புடன் இருக்கும் வண்ணம் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மாட்டுப்பண்ணையாளர்கள், உங்கள் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவும். வெள்ள அபாயத்திற்கான தகவல்களைப் பின்பற்றவுமென மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## சுகாதார தொழிற்துறையினரின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு

### சுகாதார அமைச்சர் நலிந்த

சுகாதாரத் தொழிற்துறையினரைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்படும் எனச் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார தொழிற்சங்கங்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பணியாளர்களுக்குத் தொழில்முறை வசதிகளையும், உரிய பணிச்சூழலையும் வழங்குவது சுகாதார அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் எனவும் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிப்பு

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் விடுவிப்பில் ஏற்படும் தாமதங்களை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை சுங்கம் ஒரு விசேட திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட அறிக்கையொன்றினூடாகத் தெரிவித்தார்.

அதற்மைய கொழும்புத் துறைமுகத்திலிருந்து 459 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## கிணற்றினுள் வீழ்ந்த குழந்தை உயிரிழப்பு

இரண்டு வயதுப் பெண் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு ஏறாவூரில் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் இரண்டாம் பிரிவு மக்காமடி வீதியைச் சேர்ந்த முகமட் ஷரகீர் ஜப்பிரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் வீடொன்றிலுள்ள கிணற்றின் அருகில் கதிரை ஒன்று வைக்கப்பட்டிருந்த நிலையில், சம்பவ தினமான நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குறித்த குழந்தை வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த போது கிணற்றுக்கு அருகில் வைத்திருந்த கதிரையில் ஏறி கிணற்றை எட்டிப்பார்த்த நிலையில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளது.

இந்த நிலையில் குழந்தையைக் காணவில்லை எனப் பெற்றோர் தேடிய நிலையில் கிணற்றுக்குள் குழந்தை வீழ்ந்து கிடப்பதைக்கண்டு உடனடியாகக் குழந்தையை மட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குழந்தையைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தை உயிரிழந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## டேட்டாப் பொதிகளின் விலை அதிகரிப்பா?

### மறுக்கிறது தொலைத்தொடர்பு ஆணைக்குழு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளுக்கான டேட்டாப் பொதிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் தவறானவை என்று இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் இயக்குநர் இந்திரஜித் ஹடபாங்கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு தொலைபேசிப் பொதியின் விலையையும் அதிகரிக்க எந்தவொரு நிறுவனத்திற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் வாடிக்கையாளர்கள் தாம் செயற்படுத்திய டேட்டா பொதியின் விலையில் அதிகரிப்பை எதிர்கொண்டால் அது தொடர்பான ஆதாரங்களை ஆணையத்திடம் சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி - I

12

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

• அந்த எண்ணிக்கை உள்ளூராட்சி அதிகாரசபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கிலொன்றுக்கு சமமான எண்ணிக்கையால் பிரிக்கப்படும். அது பெண் பிரதிநிதிகளுக்குரிய "தீர்மான எண்ணிக்கை" ஆகக் கருதப்படும்.

• ஒவ்வோர் அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுவும் பெற்ற வாக்குகளை அந்த தீர்மான எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் அந்த அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு பிரதிநிதித்துவப் படுத்த வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே வட்டாரம் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக கட்சியினால் தெரிவு செய்யப்பட வேண்டிய எஞ்சிய உறுப்பினர்கள், விகிதாசார முறையில் குறித்த கட்சிக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து நியமிக்கப்படுவார்கள்.


### வேட்புமனுப் பத்திரத்தில் இளைஞர் வேட்பாளர்களை உள்ளடக்குவது தொடர்பான தற்போதைய நிலைமை யாது?

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நூற்றுக்கு 25 வீதமான இளைஞர் வேட்பாளர்கள் உள்ளடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இந்த எண்ணிக்கை நூற்றுக்கு 30 வீதமாக உயர்த்தப்பட்டது. எனினும் இது கட்டாயமாக்கப்படவில்லை.

### வாக்குச் சீட்டின் தோற்றம் எவ்வாறு அமைந்திருக்கும்?

தேர்தலில் போட்டியிடவுள்ள சகல அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களும் சிங்கள மொழி அகராதியின் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்பட்டு வாக்குச் சீட்டில் மும்மொழிகளிலும் குறிப்பிடப்படுவதுடன், அதற்குக் கீழே தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழுக்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்களின் பிரகாரம் சுயேச்சைக் குழுக்களது இலக்கங்களுடன் குறிப்பிடப்படும்.

வாக்குச் சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு முன்பாகவும், சுயேட்சைக் குழுக்களுக்கு முன்பாகவும் அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் சின்னங்கள் அச்சிடப்படுவதுடன், அச்சின்னங்களுக்கு முன்பாக புள்ளடி இடுவதற்கான வெற்றுக் கூடும் அச்சிடப்படும். (விருப்புவாக்குக்கான வெற்றுக்கூடோ மற்றும் வேட்பாளர்களின் பெயர்களோ வாக்குச்சீட்டில் இருக்காது).




தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் யாரென்பதை வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு வட்டார மட்டத்திலும் விகிதாசார மட்டத்திலும் தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் கீழ் கட்சிகளது, சுயேட்சைக் குழுக்களது அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியல் வாக்காளர்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.

இது தவிர குறித்த அட்டவணையில் உள்ளபடி கட்சிகளது, சுயேட்சைக் குழுக்களது அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியல் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு குறித்த வாக்களிப்பு நிலையங்களின் காட்சிப்படுத்தப்படும்.

இதன் பிரகாரம் அபேட்சகர்களின் பெயர்கள் வாக்குச் சீட்டில் குறிப்பிடப்படாது விடினும், தமது வாக்கினை அளிக்கவிருக்கும் கட்சியின் அல்லது குழுவின் அபேட்சகர் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அட்டவணையின் மூலம் தாம் விரும்பிய அபேட்சகர் யாரென்பதனையும் அறிந்து கொள்ள முடியும்.

### வாக்கெண்ணும் நிலையங்கள் எவ்வாறு அமைத்துக் கொள்ளப்படும்?

வாக்களிப்பு முடிந்ததும் மாலை 4.00 மணிக்கு பிறகு அனைத்து வாக்களிப்பு நிலையங்களும் வாக்கு எண்ணும் நிலையங்களாக மாறிவிடும். மாலை 4.00 மணிக்கு பிறகு வாக்குகள் எண்ணப்படும். காலையிலிருந்து மாலை வரை வாக்களிப்பு உத்தியோகத்தர்களாக இருந்தவர்கள் மாலை 4.00 மணிக்குப் பிறகு வாக்கு எண்ணும் உத்தியோகத்தர்களாக மாறிவிடுவர். அந்த இடத்திலேயே வாக்குகள் எண்ணப்படும். அதாவது ஒரு வட்டாரத்திற்கு ஒரு வாக்களிப்பு நிலையம் அமைந்திருக்குமிடத்து, அதே வாக்களிப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் நடாத்தப்படும். ஒரு வட்டாரத்தினுள் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் அமைந்திருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவரால் தீர்மானிக்கபடுகின்ற ஒரு வாக்களிப்பு நிலையத்திலோ அல்லது வாக்களிப்பு நிலையங்களிலோ வாக்குகள் எண்ணப்படும்.

### வட்டார முடிவு உடனடியாக அறிவிக்கப்படும்

அதன்படி வாக்குகள் எண்ணப்பட்டு அந்த வட்டாரத்தில் எந்தக் கட்சி வெற்றிபெற்றுள்ளது என உயர் அதிகாரி அறிவிப்பார். அதன்படி வெற்றிபெற்ற கட்சியின் சார்பில் குறித்த வட்டாரத்தில் போட்டியிட்டவர் வெற்றிபெற்றதாக எடுத்துக்கொள்ளப்படுவார். முன்னர் கூறியதுபோல் சிலவேளை ஒரு வட்டாரத்திற்கு இரண்டு, மூன்று வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்படலாம். அப்படியான சந்தர்ப்பம் வந்தால் அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்குகள் எண்ணப்பட்டு ஒன்றாக சேர்க்கப்பட்டு வெற்றிபெற்ற கட்சி அறிவிக்கப்படும். அது மட்டுமல்ல அந்த வட்டாரத்திற்கு வழங்கப்பட்டுள்ள தபால் வாக்குகளும் சேர்க்கப்பட்டு முழுமையாகவே எண்ணப்படும்.

### இந்த தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பது எவ்வாறு?

இந்த தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் போது முக்கியமாக நான்கு விடயங்கள் சம்பந்தமாக கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

• ஒருமை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

• பன்மை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

• விகிதாசார அடிப்படையில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

• பெண் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

இவற்றை தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தில் உள்ள உதாரணங்கள் மூலம் விளக்குவதனால் புரிந்து கொள்வதற்கு இலகுவாக அமையும்.

உதாரணம்-: A என்னும் உள்ளூராட்சி சபை ஒன்றில் ஒருமை வட்டார மட்டத்திலான 14 வட்டாரங்களையும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட பன்மை வட்டார மட்டத்திலான 01 வட்டாரத்தையும் கொண்டுள்ளது. இந்த பிரதேச சபைக்காக X, Y, Z என்னும் மூன்று அரசியற் கட்சிகள் போட்டியிட்டன என நாம் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அக் கட்சிகள் பெற்ற வாக்குகளும் வெற்றிபெற்ற வட்டாரங்களும் அட்டவணை 7இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை-7 X,Y,Z கட்சிகள் பெற்ற வாக்குகளும் வெற்றிபெற்ற வட்டாரங்களும்

| வட்டாரம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | அளிக்கப்பட்ட வாக்குகள் (70%) | பெற்றுக் கொண்ட வாக்குகள் | | | வட்டாரத்தில் வெற்றியீட்டியது | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | X கட்சி | Y கட்சி | Z கட்சி | X கட்சி | Y கட்சி | Z கட்சி |
| 01 | 4500 | 3150 | 1638 | 1166 | 346 | 01 | - | - |
| 02 | 5200 | 3640 | 1893 | 1347 | 400 | 01 | - | - |
| 03 | 6600 | 4620 | 1710 | 2402 | 508 | - | 01 | - |
| 04 | 5000 | 3500 | 1820 | 1295 | 385 | 01 | - | - |
| 05 | 6000 | 4200 | 1554 | 2184 | 462 | - | 01 | - |
| 06 | 4900 | 3430 | 1784 | 1269 | 377 | 01 | - | - |
| 07 | 7250 | 5075 | 2639 | 1878 | 558 | 01 | - | - |
| 08 | 4750 | 3325 | 1729 | 1230 | 366 | 01 | - | - |
| 09 | 5200 | 3640 | 1893 | 1347 | 400 | 01 | - | - |
| 10 | 4100 | 2870 | 1492 | 1062 | 316 | 01 | - | - |
| 11 | 4600 | 3220 | 1675 | 1191 | 354 | 01 | - | - |
| 12 | 5100 | 3570 | 1856 | 1321 | 393 | 01 | - | - |
| 13 | 6300 | 4410 | 1632 | 2293 | 485 | - | 01 | - |
| 14 | 4200 | 2940 | 1529 | 1087 | 323 | 01 | - | - |
| 15பன்மை வட்டாரம் | 8500 | 5950 | 3094 | 2202 | 654 | 02 | - | - |
| மொத்தம் | 82200 | 57540 | 27938 | 23274 | 6327 | 13 | 03 | 00 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்றொழிலாளர்...

கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெகு விரைவில் இந்திய இலங்கைக் கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு நடைபெறும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கலாநிதிப்...

வலகத்தின் உயர் அதிகாரி உட்பட பலர் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக சம்பந்தப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகப் பாராளுமன்றத் தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் உட்பட பலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அத்தோடு, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் பாராளுமன்றத்திற்குச் சென்று அதிகாரிகள் சிலரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தனர்.

எனினும், சபை முதல்வர் காரியாலயத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் பதிவிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் குறிப்பிடப்பட்டிருப்பது தொடர்பாக அமைச்சர் சமீபத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு வழங்கியதோடு, அது தொடர்பாக தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-7)

## கிளிநொச்சியில்...

தற்பொழுது இறந்த யானையின் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகக் கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இறந்த யானையின் சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,316)

## தமிழரசுக் கட்சி...

கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வரும் புதிய அரசியலமைப்பு விடயத்தினை தமிழ்க் கட்சிகள் கூட்டாக கையாளுதல் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் வகிபாகம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படலாம் என்று அக்கட்சியின் நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7,250)

## சீன ஜனாதிபதி...

சீனாவிற்கு 4 நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இன்று பிற்பகல் சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்கை சீன மக்கள் மண்டபத்தில் சந்திக்கிறார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும், சீன ஜனாதிபதிக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் ஜனாதிபதி அநுரவின் சீன விஜயத்தினை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. (ம-7)

## 13ஆவது...

தமிழகத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக நாங்கள் என்ன கருதுகின்றோம் என்பதை விடவும் தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது தான் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தினைத் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்றார்கள் என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்துள்ளது.

அதனடிப்படையில்தான் நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை உள்ளீர்த்திருந்தோம்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச்சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பிலும் காணப்படுகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவுள்ளதோடு அதனையடுத்து இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் விடயமாக 13ஆவது திருத்தச்சட்டத்தினையும், மாகாண சபை முறைமையும் கருதுகின்ற போது அதனை அர்த்தபுஷ்டியான நிருவாகக் கட்டமைப்பாக செயற்படுத்திப் பார்ப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஆகவே 13 ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் எமது நிலைப்பாட்டை விடவும் தமிழ் மக்களின் நிலைப்பாடே முக்கியமானது. அதேநேரம், தோழர் அநுர குமார தலைமையிலான அரசாங்கமானது அனைத்து மக்களின் ஆணையுடனேயே ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றுள்ளது.

இதனால், அது அனைத்து மக்களுக்கான அரசாங்கமாகச் செயற்படவுள்ளதோடு, மக்கள் நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (ம-7)

## வடக்...

புவியியற்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது 380 கி.மீ தூரத்தில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக 15.01.2025 காலை மழை சற்றுக் குறைவாகக் காணப்படும். ஆனால் மதியத்துக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக் கும் மிதமான மழை கிடைக்கும். ஆனால் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும்.

16.01.2025 வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு சிறியளவில் மழை கிடைக்கும். ஆனால் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்கும்.

17.01.2025 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் மிகச் சிறியளவில் மழை கிடைக்கும் என்றார். (ம-7)

## வெள்ளத்தால்...

கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் பயிர்சேத மதிப்பீடுகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன.

விவசாயிகள் அபிவிருத்தி மத்திய நிலையங்களினால் பரிந்துரைக்கப்பட்ட இறுதி இழப்பீட்டு ஆவணங்கள் பெறப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று தெரிவிதார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 5716
O 7 4 3 1 5 1
அத சம்பத O 3 1 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 291
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1746
A 32 62 67 71 A
Double Chance 90710

மெகா பவர்
திகதி 14/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2064
X 06 11 12 28 44

லக்கி 7 VIP
திகதி 2025.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 542
U 9 5 1 4 6 2 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3958
சீட்டிழுப்பு திகதி 14.01.2025
K 10 29 47 76
K

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.14
சீட்டிழுப்பு இலக்கம் 1025
மேடம் 36 39 48 53 மேடம்
50877 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
14.01.2025 வெற்றி வாரம் 424
M 3 2 6 3 7 4
65692
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,115,976.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2690
சீட்டிழுப்பு திகதி 2025.01.14 தினம் செவ்வாய்க்கிழமை
40 63 67 68 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,860,673.60
DLB

சனிதா
திகதி 14.01.2025 வெற்றி வாரம் 4851
02 10 50 51 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,859,786.80
88387
DLB

சசிரி
வெற்றி வாரம் 600
சீட்டிழுப்பு திகதி 14.01.2025 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 23 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4402
சீட்டிழுப்பு திகதி 14.01.2025 தினம் செவ்வாய்க்கிழமை
20 44 47 61 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,299,362.80
254354
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 28 01 15 41 59
சுப்பர் இலக்கம்
1866
14.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,847,924.20
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2516
சீட்டிழுப்பு திகதி: 2025.01.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,692,592.80
அட கோட்டிபதி ADA KOTIPATHI
18 21 31 73 C
253482
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்தியம்**
வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(3027)

# கண்ணீர் அஞ்சலி



அமரர் இராசு தங்கப்பிரகாசம்
(ஓய்வு நிலை கல்வித் திணைக்கள கட்டட மேற்பார்வை அதிகாரி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மைத்துனர் அமரர் மகாலிங்கம் குடும்பத்தினர்
பலாலி வீதி, உரும்பிராய், மடத்தடி.
(3026)

# ரணிலின் வழியைத் தொடரும் அநுர அவதானமாகச் செயற்பட வேண்டும்

## கரணம் தப்பினால் மரணம் என்கிறார் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமான பாதையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தயாரித்துள்ளது. இந்தப் பாதை மிகவும் அவதானமிக்கதாகும். இதைத்தவிர வேறு வழியில்லை. அதனால் அரசாங்கம் இந்தப் பாதையில் மிகவும் கவனமாகச் செல்ல வேண்டும்.

இல்லாவிட்டால் அதன் பிரதிபலன் மிகவும் ஆபத்தாக மாறும் என புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை (14) வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே புதிய ஜனநாயக முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தையே தற்போதுள்ள அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கிறது. அதனால் இதுவரை அரசாங்கம் செல்லும் பாதை சரி என நாங்கள் தெரிவிக்கிறோம். என்றாலும் ஒரு சில கட்டங்களில் தவறு ஏற்பட்டுள்ளது.

அந்தத் தவறுகளைச் சரி செய்துகொள்ளவே நாங்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கி வருகிறோம். மாறாக அரசாங்கம் வலது பக்கத்துக்கு சமிக்ஞையை காட்டிவிட்டு இடது பக்கத்துக்குத் திரும்பக்கூடாது என்றே நாங்கள் தெரிவிக்கிறோம். மக்கள் புதிய அரசாங்கம் ஒன்றை கேட்டிருந்தனர். அதனால் தற்போதுள்ள அரசாங்கத்துக்கு நாங்கள் இடமளிக்க வேண்டும் என்றார். (ம-7)

# மாணிக்கக் கற்களை சீனாவுக்கு கடத்த முயன்ற தந்தை, மகள் கைது

மாணிக்கக்கற்களை தமது ஆடைகளுக்குள் மறைத்துவைத்து சீனாவிற்கு கொண்டு செல்ல முயன்ற தந்தை, மகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையினைத் தொடர்ந்து சீனப் பிரஜைகளான தந்தையும் மகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபரான 45 வயதுடைய தந்தையும் அவரது 21 வயதுடைய மகளும் வணிக நடவடிக்கைகளிற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றித் திரிந்து வந்தது தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து சந்திரகாந்தி, கோமேதா, அரனுல், வைரோடி மற்றும் பச்சை ஆகிய மாணிக்கக் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1944 - 11 - 19 | 2025 - 01 - 13 |

## இராசு தங்கப்பிரகாசம்

(ஓய்வுநிலை கல்வித்திணைக்கள கட்ட மேற்பார்வை அதிகாரி)

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தங்கப்பிரகாசம் (ஓய்வுநிலை கல்வித்திணைக்கள கட்டட மேற்பார்வை அதிகாரி) அவர்கள் 13.01.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், வாமதேவன் மற்றும் மனோன்மணி, வச்சிராணி, லோகநாயகி, சகாதேவன், வரதன், அரியமலர், கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், அற்புதலிங்கம் மற்றும் சந்திரலிங்கம், செல்வலிங்கம், வதனா, ஜெயலலிதா ஆகியோரின் மைத்துனரும் முகுந்தன், நிசாந்தன், ஜெயந்தன், அஜந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மீனா, நளினி, கேமா, துர்க்கா, ரூபினி ஆகியோரின் மாமனாரும் மனோஜ், ஹரிஸ், சஹீரா, நித்விக், கர்ணிகா, வர்னுஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2025) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பலாலி வீதி, உரும்பிராய், மடத்தடி
076 617 3417
076 538 2691
குடும்பத்தினர்

**மொத்தக் கொள்வனவு**
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கும் பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
(745)
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/=
90/=
076 800 6500

**வீட்டுப்பணிப்பெண் தேவை**
யாழ்.நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
- சம்பளம் - 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை: 33 - 55

(3028)
தொடர்புகளுக்கு: 075 498 5400
077 937 0000, 021 221 7600

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025
தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
Qualification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)
G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
Certificate Course in English
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917
(C-2039)

**பணியாளர் தேவை**
முகாமையாளர், விற்பனை பிரதிநிதிகள், கணக்கு லிகிதர்கள் (ஆண், பெண்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
076 315 6470
(C-2040)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2043)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.